# மகுடம்


# MAKUDAM

MAKUDAM
*That they all may be one*

இதழ் : 13 makudam2007@yahoo.com சித்திரை : 01.04.2008

பல்சுவை மாத இதழ்

ம னி த ன்



வி ஞ் ஞா னி

## இ ந் தி ய ன் - த மி ழ ன்

NAVALY
Y.M.C.A
ESTD. - 1891

வெளியீடு:

நவாலி Y.M.C.A

விலை = 20/-

## ஆசிரியரின் பேனாவிலிருந்து...

**பாசமிகு வாசகர்களே!**

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் மகுடம் உங்கள் கைகளுக்கு உரிய நேரத்தில் வந்தடைவதற்கு நீங்கள் தந்துவரும் ஆதரவுகளுக்கு எப்போதும் எமது நன்றிகள் வாசிப்புப் பழக்கம் அருகி, இன்று சினிமாவிலும், தொலைக்காட்சி பார்ப்பதிலும் சிறுவர்கள், பெரியவர்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்து வரும் இந்நாட்களில் "மகுடம்" பல்சுவைச் செய்திகளையும் தந்து பல்துறைகளிலும் உங்களை ஊக்குவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளான்.

எனவே உங்களுக்கு விருப்பமான துறைகளிலேயாவது வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பியுங்கள். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். எழுதப்பழகுங்கள், சின்னச் சின்ன தகவல்கள் உங்களுக்கு விருப்பமான துறைகள் என்பவற்றில் எழுத ஆரம்பியுங்கள். எழுதுவதால் மனிதன் பரிபூரணமடைகின்றான்.

வாசிக்கவும் எழுதவும் பழகிக் கொள்கின்றவர்கள் தமக்கென தம் இல்லங்களில் சிறு நூலகங்களை உருவாக்கிக் கொள்வர். ஒரு மனிதன் பெற்றுக் கொள்ளும் ஒரு அழியாத சொத்து அறிவு "கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" உண்டு என்பது சான்றோர் வாக்கு. எனவே இந்த பல்சுவை இதழ் உங்களை நிறைவாக்கும் என்ற நம்பிக்கையில் இதை வெளியிடுகிறோம்.





-ஆசிரியர்-


## மகுடம்

இதழாசிரியர் :- வண.A.S.T.ஆனந்தன்
துணை ஆசிரியர் :- M. மதுராஜ்
இணை ஆசிரியர் :- A. பியூலா
ஆசிரியஆலோசகர்:-
திரு. நவாலியூர் நடேசன்
வண. S. ஜோன் லிங்கேஸ்வரன்
திரு. N. சத்தியவேந்தன்

| | |
|---|---|
| **பிரதிகள்** | **:- 500** |
| **நூலின் வகை** | **:- பல்சுவை இதழ்** |
| **வெளியீடு** | **:- நவாலி Y.M.C.A** |
| **பக்கங்கள்** | **:- 24** |
| **விலை** | **:- 20/=** |
| **பதிப்பு** | **:- றூபன் பிறிண்டேர்ஸ்.** |


## பாராட்டுகிறோம்

கடந்த 2007 டிசம்பரில் கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மகுடம் வாசகர்கள் அனைவரையும், அத்துடன் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்ற அனைத்து மாணவ மாணவியரையும் மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துகிறோம்.

சித்தி பெற்ற மாணவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புவோர் மாணவர்களின் படம் மற்றும் விபரங்களுடன் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள், கடிதங்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் போன்ற சகல தொடர்புகளுக்கும்,


ஆசிரியர்.
மகுடம் சஞ்சிகை
நவாலி Y.M.C.A, நவாலி
மானிப்பாய்.
T.P : 0774651244
E mail:- makudam2007@yahoo.com

சிந்தனைக்கு.....

## அன்னையை நீ அறிந்து விடு



புதுமையான ஒளிமயமாய் பூமியிலே அவதரித்தாள்;
புன்னகையை மாலையாக்கி பூமியையே கவர்ந்திட்டாள்;
ஆழியிலே முத்தைப் போன்றவள், அன்பினிலே தாஜ்மகாலானவள்;
உலகிற்கு பூமா தேவியாம், உண்மைக்கு தேவதையாம்

உன்னை அவள் பெறுவதற்கு உயிரினையே அடகு வைத்தாள்;
உன்னை இந்த உலகிற்கு உயிருடனே தந்திட்டாள்;
இத்தோடு சலிக்கவில்லை இன்னும் பாடு பட்டிட்டாள்;
இதயத்திலே உன்னை வைத்து இரவு பகல் காத்திட்டாள்



படிக்க வைக்க பாடுபட்டாள் நடக்க வைக்க ஆவலுற்றாள்;
கதைக்க வைத்து மகிழ்ந்திட்டாள், நன்மையூட்ட விளைந்திட்டாள்;
இத்தனையும் செய்த பின்பும் அவளின் அன்பை அறியாவிட்டால்;
பேதை மகனே! பாவியன்றோ, பேய்க்கும் உன்னை ஒப்பிடலாமோ?

காவியப் பெண்ணாய் அடுத்தவளைக் கட்டிவிட்ட உனக்கு இங்கு;
அருகிலிருக்கும் தாயவளைக் காட்டிவிடத் தோன்றலையோ?
ஆறடி வளர்ந்தும் நீ ஆறறிவு இருந்தும் நீ;
அன்னையையே அறியலையே, பிறந்தும் என்ன பயன் உனக்கு?

கவிதையாலே கதைக்கிறாயே காதலியோடு, கண்களாலே கதைக்கிறாயே காதலியோடு
ஒரு நிமிடம் கதைக்கிறாயா உன் அன்னையோடு,
அந்த எண்ணம் ஒன்றிருந்தால் நீ மனிதனடா
தன்னலத்தை மறந்து விட்டு உனக்காக வாழுகிறாள்.
உன் நலமே வேண்டுமென்றால் நீ உயிரற்ற நடைப்பிணமே.



வெள்ளையடித்த கல்லறையாய் நீ இன்று வாழுகிறாய்,
வெள்ளை மனம் படைத்த அன்னை உனக்குத் தெரிய வாய்ப்பில்லை
உன் மோகம் கல்லறைமேல் என் தாகம் கருவறை மேல்
அன்னையை நீ அறிந்து விடு அகிலமது உனை அறியும்.

பி. றெஜிறஜீவன், தரம் - 11
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

---

**உறவுப்பாலம்**

அன்பான மகுட ஆசான்கள் அறிவது!

கிறிஸ்துவின் அன்பு முத்தங்களும் வாழ்த்துக்களும். எனது கவிதைக்கு 1ம் இடம் கொடுத்து பிரசுரித்தமைக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த இதழுக்காக மூன்று ஆக்கங்களை அனுப்புகிறேன். குறைந்தது இரண்டையாவது தயவு செய்து மகுடத்தில் பிரசுரிக்கும்படி மிகவும் தாழ்மையுடனும், அன்பாகவும் கேட்டுக் கொள்கிறேன். மகுடத்தின் பக்கங்களை இன்னும் அதிகரித்து இன்னும் அதிக சுவையான தகவல்களை வாசகர்களுக்கு தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

செ. சியாமளா
பண்டத்தரிப்பு

# யாழ்ப்பாணத்தில் தற்கொலை

இன்று நமது சமுதாயத்தில் அழிவை ஏற்படுத்தி வரும் சம்பவங்களில் ஒன்று தற்கொலையாகும். தன்னைத் தானே அழித்துக் கொள்கின்ற இச்செயற்பாட்டிற்கு பல்வேறு வழிகள் பயன்படுத்தப்பட்டாலும் யாழ்மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பின்வருவன முக்கியம் பெறுகின்றன.

அவையாவன:-

*அலரி விதை சாப்பிடுதல்*
*கழுத்தில் சுருக்கு மாட்டுதல்*
*கிருமி நாசினி அருந்துதல்*
*கிணற்றில் குதித்தல்*

போன்றவை இடம் பெற்றாலும் அலரி விதை சாப்பிட்டு தற்கொலை செய்பவர்களே அதிகமாகவுள்ளனர். அலரி மரத்தின் எல்லாப் பகுதிகளும் நச்சுத்தன்மை கொண்டனவாகவே காணப்படுகின்றன. அலரி விதையைப் பயன்படுத்தி தற்கொலை செய்ய முயற்சிப்போர் மட்டும் நாள் ஒன்றுக்கு யாழ் மாவட்டத்தில் 26 பேராகவுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதிலும் 25 வயதிற்குட்பட்டவர்களே அதிகமாகவுள்ளனர்.

**தற்கொலை முயற்சிக்கான காரணங்கள்**

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்கள் இளவயதினை உடையவர்களாக உள்ளனர். குறிப்பாகக் குமரப்பருவத்தில் இருப்பவர்களின் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றம் காரணமாக இப்பருவம் நெருக்கடியும் கொந்தளிப்பும் நிறைந்ததாக உள்ளது. இதனால் பலர் எழுச்சிக்கு உள்ளாவதுடன் கோபம், வெறுப்பு, ஆவேசம் போன்ற உணர்வுகளுக்கு ஆளாகி தற்கொலையிலும் ஈடுபடுகின்றனர்.

பெற்றோரின் கண்டிப்பு, அறிவுரை என்பன தற்கொலை முயற்சியில் ஈடுபட காரணமாக அமைந்து விடுகின்றன. சமூகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், அழுத்தங்களும் தொழில் இன்மை, வறுமை, விரக்தி என்பனவும் காரணமாக அமைகின்றன.

உறவுச் சிக்கல்கள், இளைஞர்களுக்கு ஏற்படும் காதல் பிரச்சினைகள், அவற்றில் பெற்றோர் காட்டும் கண்டிப்பு என்பன முக்கிய காரணிகளாக இருந்தாலும் வேறு சில அற்ப காரணங்களுக்காகவும் பலர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

அம்மா படம் பார்க்கப் போக அனுமதிக்கவில்லை; பிறந்த நாளுக்கு உடுப்பு வாங்கித் தரவில்லை; அப்பா பேசிப்போட்டார்; அண்ணா அல்லது அக்கா அல்லது தம்பியுடன் சண்டை என்றெல்லாம் அற்ப காரணங்களைக் கூறியும் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

**தற்கொலை எண்ணம் உடையவர்களை எவ்வாறு அடையாளம் காணலாம்?**

- ❃ வாழ்க்கை பற்றிய நம்பிக்கை அற்றவர்களாக இருப்பர்.
- ❃ மன அழுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர்.
- ❃ மனம் விட்டுப் பேசத் தயங்குவார்கள்.
- ❃ தனிமையை அதிகம் விரும்புவார்கள்.
- ❃ மனம் சோர்வடைந்தவர்களாக இருப்பர்.
- ❃ சலிப்பாகப் பேசுவார்கள்.
  - ❃ என்ன வாழ்க்கை!!
  - ❃ ஏன்தான் வாழ்ந்து!
  - ❃ என்னால யாருக்குத்தான் லாபம்

  என்ற பதங்களைப் பயன்படுத்துவர்.

சாவைப் பற்றி அடிக்கடி கதைப்பர்.

**தற்கொலைக்கு முயற்சித்துத் தப்பிக் கொண்டவர்கள் தொடர்பாக மற்றயவர்கள் என்ன செய்யலாம்?**

- ✓ குறித்த நபரை உளவளத் துணையாளரிடம் அழைத்துச் சென்று உள வளச்சிகிச்சையை வழங்க வேண்டும்.
- ✓ தற்கொலை முயற்சியில் ஈடுபட்டமை தொடர்பாக கேலி, கிண்டல் செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.
- ✓ தற்கொலை முயற்சி என்பது ஒரு வகை உள நோயே தவிர ஆரோக்கியமான மனித நடத்தை அல்ல என்பதனை அறிய வைக்க வேண்டும்.
- ✓ தற்கொலைக்கான காரணத்தைக் கண்டறிந்து அதனை நிவிர்த்தி செய்ய வேண்டும்.
- ✓ குறித்த நபர் தொடர்பாக அவருக்கு நெருக்கமானவர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

த. ஸ்ரீகமலநாதன்.
உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிலுனர்
-அகவொளி

# வார்த்தை ஜாலப் போட்டி – மகுடம் 13

1. கீழுள்ள எழுத்துக்களுக்குள் நீங்கள் மேலிருந்து கீழாகவோ V, கீழிலிருந்து மேலாகவோ Λ, இடமிருந்து வலமாகவோ >, வலமிருந்து இடமாகவோ < 3 நாடுகளின் பெயர்களையும் அந்த நாடுகளில் ஒரு நாட்டினுடைய தலைவரினுடைய பெயரையும் 2 மிருகங்களினதும் 2 பறவைகளினதும் பெயர்களையும் கண்டு பிடிக்க வேண்டும்.

2. ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்கு கொள்ளலாம். அருகில் உள்ள சதுரக் கட்டங்கள் கடைசிப் பக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சரியான விடைகளை பென்சில் கலராலோ அல்லது பேனாவினால் அடையாளம் இட்டோ காண்பிக்கலாம். போட்டோ பிரதிகளில் விடை எழுதுவது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விடைகளை 31.04.2008ற்கு முன் அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | சி | ப | னி | க் | ஞ் | ணு | ன | று | ரி | சி | ம | ரி |
| லூ | க் | இ | பெ | ரு | ச் | ஆ | க் | பி | டி | ல் | போ | ரி |
| க | ங் | கா | ரு | ன் | அ | ச | ல | ரி | வ | ரி | ல | சி |
| சூ | க | அ | ன் | ல் | து | ன் | ப | ய | சு | ம | யி | ந் |
| மூ | ம் | ப | ரு | யி | ந் | து | ச | த | ன் | சா | னி | யா |
| கூ | ர | ன் | யி | கு | ன் | பெ | க | ர் | ட் | ஆ | ப | ல |
| ஊ | ரு | இ | து | க் | ம் | க | ங் | சி | ம் | ட | னி | க |
| ன | சி | ஃ | ஒ | ட் | சி | வி | ட | னி | ப | ங் | கு | ல |
| வி | ஈ | உ | இ | னி | ப | ரி | னி | இ | ந் | தி | யா | ம |

## S.M.S பதில் – 5

1. அணில் தாவிப்பாயும் போது உடலை சமநிலையாக வைத்துக் கொள்ள உதவும் உறுப்பு எது?
A – முன்கால் B – பின்கால் C – வால்

2. குழந்தை பிறந்தவுடன் பீ.சி.ஜி(B.C.G) தடுப்பூசி பெற்றுக் கொண்டால் எத்தனை வருடங்களுக்கு காச நோயின் ஆபத்தான நிலைமைகள் வராது பார்த்துக் கொள்ளலாம்?
A – 3 வருடங்கள் B – 2 வருடங்கள் C – 5 வருடங்கள்

3. இலங்கை வங்கி எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
A - 1939 B - 1942 C - 1918

நீங்கள் MAKUDAM SMS என Type செய்து கேள்வி இலக்கத்தையும், சரியான பதிலுக்குரிய ஆங்கில எழுத்தையும் Type செய்து உங்கள் பெயர், முகவரியையும் குறிப்பிட்டு 0774651244 எனும் இலக்கத்திற்கு 31.04.2008இற்கு முன்னர் SMS செய்யுங்கள்.

Eg :- ( MAKUDAM SMS - 4 (1 - A, 2 - B, 3 - C)
Your Name, Your Address)


சரியான விடையளித்தோரில் 3 அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 50/= Reload செய்யப்படும்.

**SMS பதில் 4**

விடை 1 - B , 2 - C, 3 -A

50/= Reload பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1) S.N. Ganga, Chunnakam
2) T. Kanee, Anaikoddai
3) S. Mathithas, Manipay.



## புதிய கண்டுபிடிப்புக்கள்

1. விஞ்ஞான ரீதியான அவதானிப்புக் களை முதன் முதலில் அவதானித்தவர் யார்? வில்லியம் கில்பட் - இங்கிலாந்து

2. மின்னோட்டத்தினால் காந்தவியல்பு ஏற்படுமென கண்டுபிடித்தவர் யார்?
ஹான்ஸ் கிறிஸ்ரியன் அர்ஸ்ரேட்

3. 1842இல் சீமெந்து உற்பத்தியைக் கண்டு பிடித்தவர் யார்?
ஜோசப் அஸ்பிடின்

4. தொலைகாட்டியைக் கண்டுபிடித்தவர் யார்? கலிலியோ கலிலி

5. ஒளி நுணுக்குக்காட்டியைக் கண்டு பிடித்தவர் யார்? சலேரியஸ் ஜான்சன்

6. குவிவுவில்லைகளைப் பயன்படுத்தி முறிவுத் தொலைகாட்டியை அமைத்தவர் யார்? ஹான்ஸ் லீப்பர் ஷேட்

## பொது அறிவு

7. தெறிப்பு தொலைகாட்டியை அமைத்தவர் யார்? சேர் ஐசாக் நியூற்றன்

8. ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் யாவர்?
ரைட் சகோதரர்கள்

9. புவிப்பரிதியின் அளவை அண்ணள வாகக் குறிப்பிட்டவர் யார்?
இரரொஸ்தினீஸ்

10. பிரகாசத்தின் அடிப்படையில் உடுக்களை வகைப்படுத்தியவர் யார்?
ஹிப்பார்கஸ்

11. புவிமைய அகிலக் கொள்கையை வெளியிட்டவர் யார்?
குளோடியஸ் தொலமி

12. புவி உட்பட எல்லாக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றதெனக் கண்டுபிடித்தவர் யார்?
நிக்கலஸ் கொப்பர்னிகஸ்

13. ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர் யார்? ஐசக் நியூற்றன்

14. வால்வெள்ளி தொடர்பான ஆராய்ச்சி களை முன்வைத்தவர் யார்?
எட்மன் ஹேலி

15. வானிலை வளர்ச்சி பெறுவதற்கு உறுதுணை புரிந்தவர்கள் யார்? ஜோன் ஹென்றி, ஊரோட், குரோர் ரிபர், ஜேம்ஸ் வாங்

16. மின் காந்தத்தின் மூலம் நிலையான காந்தத்தை தயாரித்தவர் யார்?
அம்பியர்

17. U வடிவான மின்காந்தத்தை உருவாக்கியவர் யார்?
வில்லியம் ஸ்ரேர்ஜன்

சே. சர்வீகன்
தரம் - 10B, யா/நவாலி ம.வி

---

### விந்தை!

எமது முள்ளந்தண்டில் 33 என்புகள் உள்ளன. ஆனால் இவற்றில் சில இணைவதால் 26 என்புகள் இருப்பது போன்றே தென்படும்.

---

### சந்திரன்

1. சந்திரனின் விட்டம்
3476 Km
2. புவியிலிருந்து ஆகக் குறைந்த தூரம்
356395 Km
3. புவியைச் சுற்றி வருவதற்கான காலம்
27.3 நாள்
4. திணிவு - புவியின் திணிவு
1/81
5. இரண்டு முழு நிலவுக்கு இடைப்பட்ட காலம்
29.9 நாள்

---

### விஞ்ஞானம் சார்ந்த உரையாடல்

ரதி : மாம்பழத்தினுள் வண்டு எப்படிச் செல்கின்றது?

விஜி : மாம்பழத்தினுள் வண்டு உட்புகுவது கிடையாது. மாம்பூவிலேயே வண்டின் முட்டை காணப்படும். மாம் பூ காயாகி, கனியாக மாறும். அந்த பூவிலுள்ள முட்டை வாழ்க்கைச் சுழற்சியை முடித்துக் கொண்டு பழத்திற்குள்ளேயே சிறிய வண்டாக மாறும்.



Renu

# பெண்



### பெண்கள் பற்றி இவர்கள்

☞ பெண்கள் ஆண்களை விட புத்திசாலிகள் ஏனெனில் அவர்கள் குறைவாகத் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள். **(ஜெம்ஸ் ஸ்டீபன்)**

☞ பெண்ணைப் பெற்றதனால் பல பிரமுகர்கள் பிச்சைக்காரர்களாகிறார்கள். ஆனால் அப்படிப் பெண்ணைப் பெறுவதனால் சில பிச்சைக்காரர்கள் பிரபுக்களாகவும் ஆகிறார்கள். **(அகிலன்)**

☞ பெண்களின் வாயை விட அவர்கள் கண்களே அதிகம் பேசும் **(காண்டேகர்)**

☞ அழகான பெண் கண்களுக்கு ஆனந்தத்தைத் தருகிறாள். பண்புள்ள பெண் இதயத்திற்கு ஆனந்தத்தைத் தருகிறாள். **(நெப்போலியன்)**

☞ பூவுலகில் நகரமும் சுவர்க்கமும் பெண்கள் வசமே அடங்கியுள்ளன. **(டென்னிஸன்)**

*றூபி விமலதாஸ், நவாலி*

### வாயுக்குள் அழுத்தம்

வாயில் எதையாவது போட்டு "கடக் மடக்" என்று கடிக்கின்றோம் அல்லவா? அவ்வாறு கடிக்கும் போது நாம் எவ்வளவு அழுத்தம் கொடுத்துக் கடிக்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? முன்பற்களால் கடிக்கும் போது 24 கிலோ அழுத்தத்தையும் கடைவாய்ப்பற்களால் கடிக்கும்போது 90 கிலோ அழுத்தத்தையும் கொடுக்கின்றோம். சில சமயம் 120 கிலோவிற்கும் மேலான அழுத்தத்தையும் கொடுத்துக் கடிப்பதும் உண்டு.

# மருத்துவம்

### மூலிகை வைத்தியம்

1. சூட்டு இருமலுக்கு

அதிமதுரம், கடுக்காய், மிளகு மூன்றும் சமவளவு எடுத்து இளவறுப்பாய் வறுத்து, இடித்து, ஒருவேளை சிறிதளவு தூளை எடுத்து தேனில் குழைத்து கொடுத்தால் சூட்டிருமல் நிவர்த்தியாகும்.

2. இரத்த இருமலுக்கு

கோஷ்டம், திப்பிலி, சாம்பிராணியை வறுத்து இடித்து, ஆடாதோடை இலையையும், தூதுவளை இலையையும் அவித்து பிழிந்த சாற்றில் சிறிதளவு தூளை கலந்து கொடுக்க இரத்த இருமல் தீரும்.

3. மலச்சிக்கலுக்கு

அத்திக்காயை பாகப்படி சமைத்து உணவுடன் உபயோகப்படுத்தி உண்டு வந்தால் மலச்சிக்கல், சரீர அனல், தேக வெப்பம் தீரும்.

4. தலைப்பொடுகு நீங்க

தயிர் அல்லது எலுமிச்சம்பழச்சாறு அல்லது அரைத்த வேப்பிலையை தலையிலும் முடியிலும் அடித்தோலிலும் தேய்த்து ஒருமணி நேரம் கழித்துக் கழுவிவிடவும். இவ்விதம் வாரம் ஒருமுறை செய்யவும்.

5. மாதவிலக்கின் போது வலி தீர

பாகற்கொடி இலையை சிறிதளவு மிளகும் சேர்த்து தினம் ஒரு தடவை மூன்று நாட்களிற்குச் சாப்பிடவும்.

Jeyarajah Rajeevan

# வாழ்த்துகின்றோம்



### திரு.J.B. அருமைநாயகம். J.P

நவாலி தெற்கைச் சேர்ந்தவரும் இலக்கம் 253, சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் குழுவின் அங்கத்தவருமான திரு. ஜெ. பெ. அருமைநாயகம் அவர்கள் 1978ம் ஆண்டின் 2ம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின்படி சமாதான நீதவானாக, நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். பல்வேறு சமூகப்பணிகளிலும் திருச்சபைப் பணிகளிலும் அயராது உழைத்துவரும் இவரின் பணிகள் சிறக்க மகுடம் குடும்பத்தின் சார்பிலும் வை.எம்.சி.ஏ சமூகத்தின் சார்பிலும் வாழ்த்துகின்றோம்.

குறுங்காவியம்



# அது ஒரு நிலாக்காலம்


(1)

பதினாறு வயது
இளம் காரிகையாள்
வன்னியில் தளைத்த பூங்கொடியாள்
மெல்லிய மழைத் தூறலில்
நனைந்த அவள் நிலா
புதியதோர் சூழல்
புதிய பாடசாலை
நிலாவை வரவேற்பதில்
மழைக்கும் விருப்பம் போலும்!
ஓ.... அவள் பட்டு மேனியை
முத்தமிட நினைத்தாள் அது?
பள்ளியின் வாசலிலே
அவள்
காலடி வைத்த வேளையிலே
வண்டுகள் பார்த்தன
வட்டங்கள் போட்டன.



(2)

மழைத் தூறல் பட்டதனால்
உடலிலே கூதலாட்டம்
பள்ளிக்குப் புதிதென்பதால்
உள்ளத்திலே திண்டாட்டம்
நாலா திசையினையும்
மருண்ட பார்வையோடு
மானாக நுழைந்தாள் - அவள்
புதிய வகுப்பறையில்
அட!
ஒத்த வயதினர் விழிகளிலே
வினா அந்த
அரும்பு மீசைகளின்
பார்வையிலே குளிர்
நேர் கொண்ட பார்வைகள்
விறைந்திடுமுன்னே
வாள் விழி நிலா
பார்வையைத் தழைத்தாள்.



அ. சூரியன் ஆனைக்கோட்டை

(3)

பல்கலைக்கழகம் போல்
பள்ளியிலும் ராக்கிங்கோ?
கரிய மேகத்துள்
மறையும் நிலாவைப் போல்
வெகுண்டாள் அவள்
மின்னல்கள் ஊடே
முழக்கங்கள் போல
பார்வைகள் ஊடே
கேள்விகள் எழுந்தன
கேள்விகள் தான்
பார்வையிலே வந்தாலும்
விடைகளையும் பார்வையிலே பகர
காதலியா இவள்?
பேசா பாவைபோல இவள் நிற்க
இளசுகள் அங்கே
தொடுத்தனர் கேள்விகளை



(4)

முகிலா பெயர்தனைக் கேள்?
இருளன் விழிக்க.....
ஒருகணம் நிமிர்ந்து
முகிலனை நோக்கினாள்
முகிலனும் நிலாவை நோக்க
மோதியது பார்வை
இவள் நிலா: இவன் முகில்
என்னே ஒற்றுமை!
கேள்விகளினூடு பார்வைகள் மோத
இப்பொழுது
பதில் பார்வையிலே தெறித்தது
கேட்டது என்ன?
வந்த பதில் என்ன?
எவருக்கும் விளங்கவில்லை
ஆயினும்
இருவருக்கும் விளங்கியது
இளமைக்கும் புரிந்தது.

(நிலா வருவாள்........)

## THE BIBLE AS LITERATURE

The Bible is the sacred book of the christians. A pious christian reads and studies it for moral guidance and spiritual inspiration. To him it is the word of God - the revelation of God's eternal will. As Walt Whitman said "To myriads it has been the shore and rock of safety".

But the bible can be read in another way, both by christians and people of other creeds, and by such as have no religious beliefs at all. It can be read simply as great literature. Even for christians (said by Robert Louis Stevenson) "It would startle and move anyone if they could read it freshly like a book, not droningly and chillily like a portion of the Bible". We can study the Bible, ancient Hebrew literature, as we study the great pagan literatures of ancient Greece and Rome, with delight and interest and mental profit. In the book of Isaiah for example, we shall find poetry as sublime as anything in Homer or virgil.

Most of us have to read the Bible in translations, for only learned men can read it in the original Hebrew and Greek. But as the Bible has been translated into all languages of the world, it is an open book for every one. The translation with which we are most familiar is the English Authorized version, "which" says a great literary critic, "not only intrinsically but historically is out and away the greatest book of English prose" No one can fully appreciate English literature without a knowledge of English Bible, which (Says the same critic) "Set a seal on our national style, thinking and speaking"

What is the Bible? The word "Bible" means books, and the Bible is not a book, but many books, infact it is a library. The first part (called the Old Testament) is a collection of all the ancient Jewish literature written in Hebrew that has come down to us. It consists of thirty-nine books written by different authors in different periods of time. It includes history, law, philosophy, poetry and poetical drama. Though it is through out more or less religious, this great literature is wide in scope and varied in nature. It contains some of the finest prose and poetry in the world. The New Testament (Second part) is the distinctly Christain part of the Bible, as the old is the Jewish. It also contains a number of books, including four lives of Christ and the letters of Paul the first Chirstian Missionary.

Literature has been defined as "a record of memorable speech it preserves in words a records of such deeds and thoughts as we deem worthy of preserving" The Bible is certainly this. As one writer says. "The Bible is the epic of the word.. ...... All life's fever is there its hopes and joys it suffering and sin and sorrow"

By- Andrewjah Andrew Jeyananthan,
Grade 10, English Mediam

சிறுகதை

# சப்பாத்து......

– இலக்கியன் –

முருகேசு படலையைச் சத்தம் போடாமல் கவனமாகத் திறந்து கொண்டு, அங்குமிங்கும் பார்த்தபடி மெதுவாக சொந்த வீட்டுக்குள் கள்வனைப் போல் நுழைந்தான். அதை மனிதர்கள் வசிப்பதால் வீடு என்று சொல்லலாமே தவிர மற்றப்படிக்கு அதைக் கொட்டில் என்று சொல்வதற்குக் கூட அருகதையற்றது. நெஞ்சில் தவிப்புடனும் முகத்தில் அச்சத்துடனும் மனைவியை நோக்கி "சுகந்தா எங்கே?" காற்றையே ஒலியாக்கி வினாவினான். "அவள் உங்கால விளையாடப் போட்டாளப்பா" அடுப்பில் நெருப்புண்டாக்கப் புகைக்குள் போராடும் மனைவியின் பதில் கேட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

இந்த நிம்மதி எவ்வளவு நேரத்துக்கு சுகந்தா விளையாடி முடிந்ததும் வந்து அவள் முகத்தை ஏக்கத்துடன் பார்க்கும் போது அவன் முகத்தை எங்கே கொண்டே வைப்பான். "எத்தனை நாளைக்குத் தான் ஏமாத்திறது" தகப்பனின் நெஞ்சு பிஞ்சு நெஞ்சை ஏமாற்றுவதை நினைத்து கனத்தது. மகள் கேட்டால் என்ன பதில் கூறுவது? முருகேசுவின் மனம் மனைவி கொடுத்த வெறுந்தேத்தண்ணியுடன் பதில் தேடுவதில் ஈடுபடத் தொடங்கியது.

முருகேசு அன்றாடம் உழைத்து வயிற்றைக் கழுவும் கூலி வேலைக்காரன். அவனுக்கு ஒரு நாள் வேலை கிடைக்காவிடில் அவன் ஐந்து பிள்ளைகளின் வயிற்றைப் பச்சைத்தண்ணீர் தான் கழுவும். அவனுக்குச் சொந்தமானதெல்லாம் இந்த ஒண்டிக் கொட்டிலும், மனைவியும் ஐந்து பிள்ளைகளும், ஓடும் போதே புதிய சினிமாப் பாட்டுக்கு மெட்டமைக்கும் மிகப் பழைய சைக்கிளும், வயிறுக்கும் வாலுக்கும் வித்தியாசம் இல்லாமல் அசையும் நாயும். இவை தவிர என்றுமே அவனை வீட்டு நீங்காச் சொத்துக்களான பசி, வறுமை, சோகம், தவிப்பு போன்றவற்றுடன் இடைக்கிடை வந்து தாலாட்டிப் போகும் பகல் கனவும் தான். இதை விட்டால் அவனிடம் ஒன்றுமே இல்லை.

படலை திறக்கும் சத்தம் கேட்டதும் மனம் பதில் தேடுவதை விடுத்து பதறத் தொடங்கியது "ஐயோ கேக்கப்போறாள்!" பரிதவித்தவன் வாசலை நோக்கினான். அவனது மூத்த புத்திரியான 6ம் தரத்தில் படிக்கும் சுகந்தா வேர்க்க விறுவிறுக்க விளையாட்டின் களைப்பு முகத்தில் இருக்க வீட்டை நோக்கி ஓடிவந்து அவனைக் கடந்து கிணத்தடிக்கு முகம் கழுவச் சென்றாள். "ஓ...... அவள் விளையாட்டு ருசியில் அதை மறந்து விட்டாள்" முருகேசுவின் மனம் தனக்குள்ளே சொல்லிக் கொண்டது. "சே..... என்ன வாழ்க்கையப்பா. சின்னஞ்சிறுசின்ர ஆசையக் கூட நிறைவேற்றத் தெரியாத நானெல்லாம் ஒரு அப்பனா, பிள்ளையள மட்டும் பெறத் தெரியுது. அதுகள சீரா வளக்க முடியல" அவனது மனம் அவனையே நொந்து கொண்டது. திரும்பி மகளைப் பார்த்தான். அவள் நான்கு பக்கமும் நாய் பிய்த்த துணி போல கிடந்த பாயை விரிச்சுப் போட்டு விட்டு நியூஸ் பேப்பரால் ஒட்டை அடைக்கப்பட்டும், ஆங்காங்கு ஆறுகள் போன்று ஓடும் வெடிப்புக்களின் மத்தியிலும் புகை மண்டிய கருமையினூடும் வெளிச்சம் கசியும் லாந்தரை வைத்து முழங்கால் மடித்து கீழிருந்து நிலத்துக்கும் கண்ணுக்கும் இடையில் இருக்கும் ஒரு சாண் இடைவெளிக்குள் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

மற்றப் பிள்ளைகள் மாதிரிப் பணத்தைக் கொட்டி ரியூசனுக்கு அனுப்பாட்டியும் பள்ளிக் கூடப் படிப்பை மட்டும் வைத்துக் கொலசிப் பாஸ் பண்ணிப் போட்டாள். அவள் கொலசிப் பாஸ் பண்ணினதும் பெரிய ஸ்கூலிலதான் சேர்க்கவேண்டுமென்று நினைத்தான். ஆனால் பாடசாலையைச் சாட்டாக வைத்து கல்விக்கு விலைபேசும் பெரும் பாடசாலைகளின் பணப் பசிக்கு நடுத்தரக் குடும்பங்களே முகங்கொடுக்க திணறும் போது முருகேசு எந்த மூலைக்கு.

படித்துக் கொண்டிருந்த பிள்ளை திடுக்குற்று எழுந்து வந்து தகப்பனின் மடியில் அமர்ந்து

அவன் முகவாயை திருப்பி "அப்பா வாங்கினியா?" என்று ஆசையும், ஏக்கமும் கலந்து கேட்கும் பிள்ளையின் முகம் பார்த்து முருகேசுவின் இருதயம் வெடித்துவிடும் போல் இருந்தது. "இல்லையம்மா! அப்பா எப்பிடியும் நாளைக்கு கட்டாயம் பிள்ளைக்கு வாங்கித் தருவன்" என்றான் கெஞ்சலாக. "போப்பா நீ உப்பிடித்தான். கனநாளாச் சொல்லுறாய். ஒருநாளும் வாங்கிக் கொண்டுவர மாட்டேன்றியே. இண்டைக்கும் அந்தக் குண்டு ரீச்சர் ஏன் போட்டுக்கொண்டு வரேல்ல என்று அடிச்சவா" என்று கூறியபடி நீட்டிய குழந்தையின் கையில் வரைந்திருந்த செந்நிறத் தழும்புகளைக் கண்டவன் மனம் துடியாய்த் துடித்தது. "எப்படியும் நாளைக்கு ஆற்ற காலல விழுந்தாவது உடன வாங்கி பிள்ளைக்கு குடுக்க வேணும்" என்று தீர்மானித்தபடி மகளை அணைத்துக் கொண்டு எல்லா ஏழைகளுக்கும் நிம்மதி அளிக்கும் ஒரே ஒரு விடயமான நித்திரைக்குச் சென்றான்.

சூரியனுக்கு எதிராகத் திரைவிரிக்கும் பனிக்குளிர் உடலைத் தாக்கி பாயை விட்டு எழும்பாதே என்று கட்டளை போட்டும், அதைப் புறக்கணித்து விட்டு எழுந்த சுகந்தா சமைக்க உணவில்லையென்றாலும் சமையலறையை விட்டு வராத தாயைப் பார்த்து "அப்பா எங்கேம்மா?" என்று கேட்டாள். "இப்பதான் உங்கால போறார். மனுசன் வெறும் வயித்தோட போகுது" எனத் தனது ஆற்றாமையின் புலம்பலைத் தொடங்கினாள். சுகந்தா அவ்விடத்தை விட்டு நகர்ந்து பாடசாலைக்குப் புறப்படத் தயாரானாள். அம்மா கொடுத்த முருங்கை இலை வறுவலை கொஞ்சம் சீனி சேர்த்து பசியை அடக்க கசப்பைப் பாராது அடைந்துவிட்டு புத்தகங்களை வைத்து சுற்றப்பட்ட பொலித்தீன் பையைத் தூக்கிக் கொண்டு பள்ளி நோக்கி ஓடினாள்.

யாழ்ப்பாணத்தில் எவ்வளவு தான் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் தனியே கப்பல் வைத்து இறக்குமதி செய்து சாப்பிடுகின்றவர்கள் போல் யாழ்ப்பாணத்தின் உணவுப் பண்டங்களின் தட்டுப்பாடும் விலையேற்றமும் கொஞ்சமும் தாங்காத உடலைக் கொண்ட சோடாப்புட்டி அணிந்த சுகந்தாவின் குண்டு ரீச்சரும் அன்றும் அசம்பிளி முடியச் சப்பாத்துப் போட்டுக் கொண்டு வராதவர்களுக்கு கொடை வள்ளலாய் கை நிறைய கம்பினால் பரிசினை அள்ளிக் கொடுத்தார். சுகந்தாவின் கை அடிவாங்கி மரத்துப் போனாலும் அடியின் வேகத்தில் அவளை அறியாமல் அவள் கண்ணில் இருந்து கம்புத்துண்டுகளுடன் கண்ணீரும் தெறித்தது. "இண்டைக்கு மட்டுந்தான் உவளிட்டை அடிவாங்குவன். எப்படியும் அப்பா இண்டைக்கு வாங்கிக் கொண்டு வந்து விடுவார். உவளுக்கு முன்னால நாளைக்கு புதுசாப் போட்டுக் கொண்டு வந்து காட்டுறனோ இல்லையோ பாரன்" என மனசுக்குள் கருவிக் கொண்டாள்.

வகுப்பில் பாடம் நடக்கும் போதும் சுகந்தாவின் மனக்கண் முன் அடிக்கடி புது வெள்ளைச் சப்பாத்து வந்து போனது. பள்ளிக்கூடம் விட்டதும் குதூகலமாய் புதுச் சப்பாத்தை நினைத்தபடி சப்பாத்துப் போட்டிருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் காலைப் பார்த்து "நாளைக்குப் பாரன் நானும் புதுசாப் போட்டுக் கொண்டு வருவன்" என்று மனதுக்குள் கூறியபடி துள்ளல் நடைபோட்டு வீடு நோக்கி நடந்தாள்.

பாடசாலை விட்டு வரும் வழியில் ஓரிடத்தில் சனக்கூட்டம் காணப்பட்டது. ஆனால் சுகந்தா சப்பாத்துக் கொடுத்த பகல் கனவில் லயித்தபடி நடந்து சென்றவள் சிறிது நின்று நிதானித்து சனக் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்தாள். உடனே அவள் குழந்தை மனம் சப்பாத்துக் கனவைக் கலைத்து விட்டு வேடிக்கை பார்ப்பதற்காக கூட்டத்தினுள்ளே நுழைந்து எட்டிப் பார்த்தவள் "அப்பா" எனக் கதறினாள். அங்கு முருகேசு மதிகெட்ட மனிதனின் கையில் இருந்து தறிகெட்டு ஓடிய லொறி மோதி இரத்த வெள்ளத்தில் மிதந்தான். உருத்தெரியாது சிதைந்திருந்த அவன் உடலில் இருந்து விடுபட்டு ஓரமாய்க் கிடந்த கையில் இறுகியிருந்த புது வெள்ளைச் சப்பாத்து செந்நிறமாய் மாறியிருந்தது.

தமிழ்த் தேன் - துளி 10

# ஐந்து கள்வரும் ஆமையும்

ஒரு பெரிய பாத்திரம் நிறைய விடப்பட்ட நீரில் ஒரு ஆமை ஆனந்தமாக நீந்தி விளையாடிக் கொண்டிருக்கின்றது. அப்பாத்திரம் அடுப்பின் மீது வைக்கப்பட்டுள்ள தென்றும், அடுப்பில் நெருப்பு மூட்டப் படுகின்றது என்றும் ஆமையால் அறிய முடியுமா? நீந்தி விளையாடும் களிப்பிலே அது திளைத்திருக்கிறது.

அடுப்பில் மூட்டப்பட்ட தீ எரியத் தொடங்குகின்றது. தண்ணீரில் வெதவெதப்பான இளஞ்சூடு பிடிக்கிறது. ஆமைக்கு அது இதமாக இருக்கிறது. ஆனந்த மேலீட்டால் ஆமை துள்ளியெழுந்து நீரில் அமிழ்ந்து சுழியோடிக் களிக்கிறது.

நிலையற்ற அற்ப உலக இன்பங் களையே மெய்யென நம்பி அவைகளில் மூழ்கித் திளைத்து இறைவனை நினையாத மனிதனை அந்த ஆமையாகவும், உலக இன்பங்களை அடுப்பில் வைத்த பாத்திரத்திலே உள்ள நீராகவும் உருவகித்து அருளாளரான திருநாவுக்கரசு நாயனார் இவ்வண்ணம் ஒரு வண்ணமிகு நற்றமிழ் சித்திரத்தை தீட்டியுள்ளார். அதன் அருமைப்பாட்டினை அவரது அருட் தமிழிலே சுவையுங்கள்.

"வளைத்து நின்றைவர் கள்வர்
வந்தெனை நடுங்கச் செய்யத்
தளைத்து வைத்து உலையை ஏற்றி
தழலெரி படுத்த நீரில்
திளைத்து நின்றாடு கின்ற
ஆமைபோல் தெளிவிலாதேன்"

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை ஐம்பொறிகள் என்கின்றோம். மூக்கால் முகர்கின்றோம், கண்ணால் பார்க்கின்றோம். இவ்வாறு ஐம்பொறிகளால் நுகரும் உணர்வு ஐம்புலன்கள் எனப்படுகின்றது.

பொறி, புலன்கள் மனிதனது உடலுக்கும் உயிருக்கும் உறுதுணையாகத்தான் இருக்கின்றன. ஆனால் நெறி தவறாத மனித வாழ்வு - ஆன்மீக வாழ்வு என்று நோக்கும் போது அவை பலவீனமான மனித மனங்களை தீயவழிகளிலே இழுப்பவையாக உள்ளன.

பொறி, புலன்கள் ஒரு காலத்தில் தன்னை வளைத்து நின்று மதியைக் கெடுத்து சதி செய்து விட்ட நிகழ்வை நாவுக்கரசர் பெருமான் இங்கே கூறுகின்றார். தன்னோடிருந்து தனக்கு ஆதாரமாக நண்பனைப் போல் உதவி, பின்பு பெரிய சதியைச் செய்து புத்தியைக் குழப்பி நிதானமிழக்கச் செய்தமையால் பொறி புலன்களை 'ஐவர் கள்வர்'என்று அவர் கடிந்துள்ளார்.

இறைவனை மனதிலே இருத்தி அவருக்கு தம்மை ஒப்புக் கொடுத்து அவரின் அருளின்பத்தில் திளைத்திருக்கும் உறுதிமிக்க உள்ளத்தை பொறி புலன்கள் தீய வழிகளில் தள்ளிவிட முடியாது.

பொறி, புலன்களின் வாய்ப்பட்டு போகிறவர்கள் உலக இன்பங்களே மெய்யான இன்பங்கள் என மயங்கி அவைகளில் நீச்சலடித்து அவற்றுள் அந்த ஆமைபோல் மரணிக்கிறார்கள்.

இறைவனின் அருளே எமக்கு மேலான இன்ப வாழ்வு அளிக்கும் என்று கருதாது பொறி புலன்களால் இழுபட்டு அற்ப இன்பங்களைப் பெரிதென நம்பி அவற்றைப் பெற பொய், புரட்டு, களவு, கொலை முதலிய பாவங்களைச் செய்கிறார்கள்.

இவ்வாறு மனதில் மூண்டெழும் உலக இன்பப் போதையால் அவற்றைத் தேடி ஒருவரையொருவர் முந்திக்கொண்டு ஓய்வின்றி வாழ்நாள் முழுவதும் எங்கெங்கோவெல்லாம் ஓடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று மரணம் வந்துவிடுகிறது. தண்ணீர் பொங்கிக் கொதித்த போது அந்த ஆமை அடைந்த பரிதாப மரணம் போல் இதுவும் பரிதாப மரணமே!



- கபிலர் -

(தேன்துளி சொட்டும்....)

# கவியருவி

## சமாதானமே வா வா வா!

சமாதானமே, சமாதானமே வா வா
சச்சரவுகள் நீக்க நீயும் வா வா
பாரில் உள்ள மக்கள் போற்ற வா வா
பாவலர்கள் வாழ்த்திப் பாட வா வா

சண்டை நீங்க சமாதானமே வா வா
சகல பேரும் நிம்மதியாக வாழ வா வா
எட்டுத் திசையும் பணிந்து போற்ற வா வா
எல்லோர் உள்ளத்திலும் குடியிருக்க வா வா

சமாதானமே அழியாத வரம் பெற்று வா வா
சற்றும் தாமதியாமல் ஓடி வா வா
வெண்புறாச் சின்னம் சூட்டும் சமாதானம்
வா வா
வெற்றி கொண்டு வீறு நடை போட்டு வா வா

U. பிறேமலக்ஷன் Grade -11A
J/ Manipay Memorial English School ,

## அன்னைக்கு நிகர்

நான் பிறக்கையிலே வலி சுமந்தாள்
எனை வளர்க்கையிலே சுகம் தவிர்த்தாள்
நல்லவை சொல்லியே நடை பயில
வைத்தாள்
வேதம் சொல்லியே வேற்றுமை ஒழிப்பாள்

எப்படி வாழ்த்துவேன் நான் இவளை
அகராதி புரட்டியும்
எனக்கோர் வார்த்தை கிட்டவில்லையே
அன்னையே உனக்கு நிகர் நீ தான்.

Nofinshia . A
J/ Holy family convent

## பணத்தில் வேட்கை

அறிவைத் தேடினோர் விரும்பியது கல்வி.
கல்வியைத் தேடினோர் விரும்பியது பட்டம்.
பட்டத்தைத் தேடினோர் விரும்பியது பதவி.
பதவியில் இருந்துகொண்டு தேடியது
பணமொன்றே.


பி. றெஜிறஜீவன்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி

## முதியோரைப் பேணுவோம்

குழந்தைப் பருவத்திலே மழலை மொழி பேசி
பிள்ளைப்பருவத்திலே குறும்புடன் விளையாடி
வாலிப வயதினிலே வளர்ச்சிக்காய் பாடுபட்டு
வளர்த்து ஆளாக்கி வாழ்க்கையை வளமாக்கி
பருவத்தின் இறுதியிலே பக்குவமாய்
ஓய்வெடுக்கும்

தன்னிகரில்லாப் பதவி தான் வயோதிபம் – என்றும்
உயர்ந்த உன்னத பணியாகும்
வாழ்க்கை தடங்களிலே எமக்கு
வாழ்வளித்த வள்ளல்களை பாரமென
எண்ணியதால் வயோதிபர் இல்லத்தில்
சேர்க்கிறார்கள் பெற்று வளர்த்த பிள்ளைகள்

வாழ்க்கைப் படியெல்லாம் தாண்டி வந்த
முதியோர்கள் கூறும் அறிவுரைகள் – புலவர்கள்
கூட கூறாத சிறந்த கருத்தாகும்
பணம் பொருள் தான் பெரிதென்று – அதை
பாதுகாக்கும் எம்மவரே! அதை விட
பெருஞ் சொத்து எம் மூதாதையர் என்பதை
மனதில் பதித்து – என்றும்
மதித்து வாருங்கள்.



அ. யேசுகி தரம் -9.
யா/நவாலி. ம. வி

## தலைவிதி



கூடை நிறையப் பூவை
தன் தலையிலே சுமந்து
அடுத்தவர் கூந்தலில் சூட
பூ விற்பவள் தன் கூந்தலிலே
பூச்சூட முடியாதவள்

திருமதி. ரூபி விமலதாஸ், நவாலி

# கிறிக்கெட் வரலாற்றில் சுவையான தகவல்கள்

### இரட்டைச் சதத்துடன் ஆரம்பம்



தாம் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியிலேயே இரட்டைச் சதங்களைக் குவித்து அசத்தியவர் இங்கிலாந்து அணி வீரர் R.E. Foster. 1903/04 காலப்பகுதியில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒரு போட்டியில் இவர் அறிமுகமானார். அறிமுக ஆட்டமே அசத்தலான ஆட்டம். இவர் எடுத்த ஓட்டங்கள் எத்தனை தெரியுமா, 283 ஓட்டங்கள 17 ஓட்டங்கள் எடுத்திருந்தால் முச்சதமாகியிருக்கும். "அசத்தப்போவது யாரு" என்ற ரசிகர்களின் ஆவலுக்கு அன்று அவல் கொடுத்தார் R.E. Foster.

### அசுர ஆட்டம்

1880ம் ஆண்டு ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் இங்கிலாந்தின் வீரர் "பான்னர்" பந்தை முரட்டுத் தனமாக ஓங்கி அடித்தார். பந்து செங்குத்தாக மேல் நோக்கி கிளம்பியது. புவியீர்ப்புச் சக்தி காரணமாக பந்து கீழ் நோக்கி வருமல்லவா? அதற்குள் இவர் 2 ஓட்டங்களை ஓடி முடித்து விட்டார். அதன் பின்பே G.F.Grace என்பவரால் பந்தை Catch பிடிக்க முடிந்தது. இது "மேல் எழுந்து சென்ற சிக்ஸ்" ஆகக் கருதப்பட்டது.



4 வருடங்களின் பின் 1884ம் ஆண்டு இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற புகைப்பிடிப்போர் - புகை பிடியாதோர் அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இதே வீரர் "பான்னர்" இருமுறை பந்து மைதானத்துக்கு வெளியே போகும்படி வேகமாக அடித்தார். பந்து வீசியவர் அந்த நாட்களில் "பிசாசு மாதிரிப் பந்து வீசுபவர்" எனப் பெயரெடுத்த F.R. ஸ்பாஃபர்த் என்பவர். இது அன்று அசுர ஆட்டம் தானே.

### மைதானத்துக்கு வெளியே போனால் "சிக்ஸ்"




1960ம் ஆண்டுகளில் கிறிக்கெற்றில் இருந்த நடைமுறைகள் பல வித்தியாசமானவை. இன்றைக்கு பந்து எல்லைக் கோட்டை, மேலால் சென்று தாண்டினால் தான் "சிக்ஸ்". ஆனால் அன்று பந்து மைதானத்தைத் தாண்டினால் "சிக்ஸ்". 1869ம் ஆண்டு "சசெக்ஸ்" அணிக்கு எதிராக "கென்ற்" அணியின் சார்பில் விளையாடிய "தார்ண்டன்" 9 சிக்சர்களை அப்போட்டியில் விளாசினார். ஃ 9 தரம் மைதானத்தை விட்டுப் பந்து சென்று விட்டது அன்று பார்வையாளர்களுக்கு பந்தை தேடுவதே வேலையாகிப் பேய்விட்டது.

தொகுப்பு :- ஏயெஸ்ரி

தொடரும் .........




## புத்திசாலி ராமு

ராமு மிகவும் வறியவன். ஆனால் மிகவும் புத்திசாலி. அவன் பழங்களை விற்று கிடைக்கும் பணத்தில் வாழ்க்கையை நடாத்தினான். அவன் மீதிப் பணத்தை ஓர் உண்டியலில் போட்டு வைத்தான். பல நாட்களின் பின் அவன் ஒரு வீடு கட்டுவதற்கு யோசித்தான். ஆனால் பணமோ இல்லை. அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஒரு நாள் அந்த உண்டியலை உடைத்தான். அதனுள் பெரிய தொகைப் பணம் இருந்தது. இது அந்த நாட்டு அரசனுக்குத் தெரிந்தது. அவனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அரசன் ராமுவை அழைத்து "நீ தருமமே செய்வதில்லை. ஏழைகளுக்கு நீ தருமம் செய்ய வேண்டும்" என்றான். ராமு "என்னிடம் என்ன இருக்கிறது தருமம் செய்ய?" எனக் கேட்டான். "ஏன் உன் வீடு இருக்கிறதே" என்றார் அரசன். ஆனால் ராமு அதை மற்றவர்களிடம் கொடுக்க விரும்பவில்லை, அரை மனத்துடன் ராமு "சரி" என்றான். வீட்டிற்குச் சென்று யோசித்தான். ஒரு நல்ல திட்டம் போட்டான். "உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவர்களுக்குத் தான் வீடு" என்று அனைவருக்கும் கூறினான். ஒருநாள் ஒருவன் அவனது வீட்டைக் கேட்டு வந்தான். வந்தவன் "நான் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவன்" என்றான். ராமு சிரித்துக் கொண்டு "நீ உள்ளதைக் கொண்டு திருப்தி அடைபவனாயின் ஏன் என் வீட்டைக் கேட்டு வந்தாய்? உன் வீட்டிலேயே சந்தோசமாக இருந்திருப்பாயே!" என்றான். வந்தவனும் வெட்கித் தலை குனிந்தான். அரசன் இதைக் கேட்டு வயிறு குலுங்கச் சிரித்தான். பின் "ராமு நீயே உன் வீட்டில் இரு" என்றார் அரசன். ராமுவைப் போல சிக்கனத்துடனும் புத்திசாலித் தனமாகவும் செயற்பட்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

பவதாரணி கோகுலானந்தன், தரம் - 5
யா/ மானிப்பாய் விவே.வித்தியாசாலை

## ஆட்டுக்கு 16 கால்கள்

குரு ஒருவர் தன்னுடைய சீடர்கள் எல்லோருமே மிகவும் புத்திசாலிகள் என்று பெருமைப்பட்டுக் கொள்வார். அதை பரிசோதித்துப் பார்ப்பதற்காக ஒருவர் வந்தார்.

சீடர்களிலேயே மிகவும் மந்தமானவர்கள் போன்று தோற்றமளித்த ஒருவனைப் பார்த்து "ஒரு வயது கொண்ட ஆட்டுக்கு நான்கு கால்கள் என்றால், அதே ஆட்டுக்கு நான்கு வயதாகும் போது எத்தனை கால்கள் இருக்கும்" என்று கேட்டார்.

சீடன் தாமதமில்லாமல் " பதினாறு கால்கள்" என்று பதிலளித்தான். கேள்வி கேட்டவர் குருவைக் கேலியாகப் பார்த்தார். "சீடன் சரியாகத் தானே சொன்னான்" என்றார் குரு.

"எப்படி" என்று கேட்டார் வந்தவர். "பதினாறு கால் - அதாவது 16 X 1/4, ஆக 4. விடை சரிதானே" என்று கேட்டார் குரு. வந்தவர் அசடு வழிய திருதிருவென முழிக்கத் தொடங்கினார்.

ப. கஜானி (உடுவில் )

## தாயின் அன்பு

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்....." என்னும் ஔவையின் வாக்கிற்கிணங்க அன்னையானவள் எம்மை வழி நடத்திச் செல்கின்றாள். ஐயிரண்டு திங்கள் அங்கமெல்லாம் நொந்து சுமந்து அவனியில் எம்மை ஈன்றெடுத்த அருமைத் தாய். அப்படிப்பட்ட அன்னையின் அன்பு "வற்றாத கடல் போல்" அளவிடமுடியாதது. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் என்னும் பொய்யாமொழிப் புலவரின் அருள் வாக்கிற்கு இணங்க அன்னையவளின் அன்பினை அடைத்து வைக்க முடியாது. கருவிலே உருவாகும் கருணையின் வடிவான தாயின் பாசம், பாரினில் நாம் மறையும் வரை எம்மைத் தொடர்ந்து கொண்டே வரும்.

அன்புக் கடல் அன்னையின் புகழை "ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா?" என்று திரைப்பட பாடல்களில் கூட வர்ணித்துள்ளார்கள். துன்பத்தில் துவண்டு நிற்கும் எம்மை அன்பு வார்த்தைகளால் ஆறுதல் கூறி தேற்றுபவரும் தாயே. "தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை" எனும் நல்வாக்கிற்கு இணங்க கடவுளுக்கு அடுத்தபடியாக வணக்கத்திற் குரியவள் தாயே. எம்மைத் தாலாட்டி, சீராட்டி, சோறூட்டி, வளர்த்தெடுத்த அன்னையின் பாசத்தை அளவிட முடியாது.

மயூரகரன் பானுஷா
அளவெட்டி

## சிரிக்க சிந்திக்க

### என் மனைவியின் கணவன்

ராமு : (கல்லறையின் முன் அமர்ந்திருந்து) நீ இறந்திருக்கக் கூடாது நீ இறந்து போனதால் நான் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கிறேன் தெரியுமா?

சோமு : இறந்து போனவர் யார்? எங்கள் தந்தையா? மகனா?

ராமு : இறந்தவர் என் தந்தையும் இல்லை, என் மகனும் இல்லை, என் மனைவியின் முதல் கணவன்.

### SMS Jokes

Neenka eppavum siretheddu irikanum
athai nan parththeddu irukanum
Athu hospitail nadakkanum
Anga nan doctora irukkanum
Nenka mentala irukkanum

### திருமண வேண்டுதல்

திருமணமாகாத பெண் ஒருத்தி, "இறைவா! நான் இதுவரை எனக்காக எதையும் கேட்டது இல்லை. இப்போதும் எனக்காகக் கேட்க வில்லை. என் தாயாருக்கு விரைவிலே மருமகன் கிடைக்க அருள் செய்"என்று கடவுளிடம் மன்றாடினாள்.

அவள் வேண்டியது விரைவில் நிறைவேறியது..... அவள் தங்கைக்கு திருமணம் நடந்தது.

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

### உயிரின் மதிப்பு

நோயாளி:டாக்டர் என் ஆப்பரேசனுக்கு நீங்கள் வாங்கிய தொகை மிகவும் அதிகம் என்று என் மனைவி சொல்கிறாள்.

டாக்டர் :உங்க மனைவி உங்க உயிரை மிகவும் குறைவாக மதிக்கிறாங்க. அதற்கு நான் என்ன செய்வது?

## காந்தி கேட்ட குதிரை





பிச்சைக்காரன் ஒருவன் நாள் தோறும் இரவில் காந்தி சிலையின் கீழே தூங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் நள்ளிரவில் காந்தியடிகள் அவனை எழுப்பினார். "நீங்கள் என்னைத் தேசபிதா என்கிறீர்கள், விழாக் கொண்டாடு கிறீர்கள், உண்மையில் நீங்கள் எனக்காக எதையும் செய்தது இல்லை. சிவாஜியைக் குதிரையில் கம்பீரமாக அமர வைத்துள்ளீர்கள். ஆங்கிலப் படைத் தலைவர்களையும் குதிரையில் தான் அமர வைத்துள்ளீர்கள் ஆனால் கிழவனான நான் என் கைத்தடியை ஊன்றியபடி என் இரண்டு கால்களால் எப்போதும் நின்றுகொண்டேயிருக்கிறேன். கால் வலி உயிர் போகிறது. மற்றவர்களைப் போல என்னையும் ஒரு குதிரையில் அமர வையுங்கள்" என்று சொல்லி விட்டு மறுபடியும் சிலையானார்.

இப்படியே தொடர்ந்து சில நாட்கள் நடந்தன. காந்தியடிகளுக்குக் குதிரைச் சிலை அமைக்க வேண்டும் என்று நினைத்த அந்த பிச்சைக்காரன் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரைச் சந்தித்து சம்பவத்தைக் கூறினான். அவர் நம்பவில்லை. அன்றிரவு அந்த அரசியல்வாதி அந்தப் பிச்சைக்காரனுடன் சென்று காந்தி சிலையின் கீழே படுத்துக் கொண்டார்.

வழக்கம் போல காந்தியடிகள் வந்தார். "நீங்கள் சொன்னதைச் சொல்லி இந்த அரசியல்வாதியை அழைத்து வந்திருக் கிறேன்" என்றான் பிச்சைக்காரன். எரிச்சல் அடைந்த காந்தியடிகள் "முட்டாளே! நான் குதிரையை அல்லவா கொண்டு வரும்படி கேட்டேன்.நீ ஒரு கழுதையைக் கொண்டு வந்திருக்கிறாயே" என்று கோபத்துடன் சொல்லி விட்டு மீண்டும் சிலையானார்.

தேடல் 4

# பக்தியை தேடினேன் மகாகவி பாரதியில்

சித்தர்களாக இருந்தவர்கள் நாடக முறைமையிலே, தத்துவ உண்மைகளை, உண்மை தேட வந்தவர்க்கும், தம்மைத் தேட வந்தவர்க்ளும் வெளிப்படுத்தியவர்கள். இவர்கள் கடவுளின்பால் அன்புள்ளவர்கள். ஆன்மிக வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்கள். புதுச்சேரியில் மாங்கொட்டைச்சாமி என்ற ஒரு சித்தர் ஆன்மீக அறிவைத் தருபவராக இருந்தார். அவரிடம் ஆன்மீகத் தேடலுடன் மகாகவிபாரதியார் போனதாக அவரே கூறுகின்றார்.

மகாகவி பாரதியாரின் கவித்துவம் மாங்கொட்டைச் சாமியாருக்கும், மாங்கொட்டைச் சாமியாரின் ஆன்மீக அறிவு மகாகவி பாரதியாருக்கும் வேண்டுமாயிருந்தது.

தேடலோடு வந்தவர்க்குத் தெய்வீக ஞானம் சொன்னார் மாங்கொட்டைச்சாமியார் அவருக்கு மற்றுமொரு பெயர் குள்ளச்சாமியார்

எண்ணில் கோடி அறிவும்
நிலத்தில் நிலைத்து நிற்க
அண்ணல் பற்றிய அறிவை
அர்த்தமுள்ளதாகி மகாகவிக்குத்
தந்தவர் குள்ளச்சாமி.

பயமில்லா வாழ்வு பரம்பொருளால் வருவது என்பதைக் குள்ளச்சாமி மகாகவிக்குக் கற்றுத் தந்தார்.

குள்ளச்சாமியார் ஒருநாள் கந்தைப்
பொதியொன்றைச் சுமந்து வந்தார்
பொதிபற்றி மகாகவி வினாவெழுப்பிய
போது குள்ளச்சாமியார்
தெள்ளத் தெளிந்த ஞானம் தந்தார்.

*"பழங்கந்தை அழுக்குமூடை*
*வளமுறவே கட்டியவர், முதுகில் சுமந்து*
*கற்றவர்கள் பணிந்தேத்தும் கமலப்பாதக்*
*கருணைமுனி சுமந்து கொண்டு*
*என் எதிரே வந்தான்*
*தம்பிரானே! இந்தச் சுமை என்னே*
*முற்றுமிது பித்தனிடை செய்கையன்றோ*
*மூட்டை சுமந்திடுவானேன்*
*மொழிவா யென்றேன்"*

மகாகவியின் தேடலுக்குக் குள்ளச்சாமியார் ஞானத்தை நயம்படச் சொன்னார்.



*"புறத்தே நான் சுமக்கிறேன்*
*அகத்தினுள்ளே இன்னுமொரு*
*பழங்குப்பை சுமக்கின்றாய் நீ"*

என்று கூறிய குள்ளச்சாமியார், வேறு ஒன்றும் போசாது விரைந்துவிட்டார்.

மகாகவி பாரதியார் பழம் குப்பை எது என்று தேடினார். தான் கண்டதைக் காணாதவர் காணக் கற்றுத்தருகின்றார்.

மனத்தினுள்ளே பழம் பொய்கள் வளர்ப்பதாலே
இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே
இதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்
சென்றதனைக் குறித்தல் வேண்டாம்.
இன்றுபுதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
வண்ணமதை திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடியின்புற்றிருந்து வாழ்வீர்
என்றவர் பழங்குப்பையுடன் வாழ்பவரின் மீட்புப் பணிக்குப் புறப்பட்டார்.

"சிந்தையில் கள் விரும்பிச்
சிவசிவா என்பது போல்
வந்தே மாதரம் என்பார் – கிளியே
மனதிலதனைக் கொள்ளார்."
இவரெல்லாம் பழங்குப்பை சுமப்பவர்
புதிதாய்ப் பிறவாதவர்கள்.
பழமை பழமையென்று பாவனை பேசலன்றிப்
பழமை இருந்தநிலை – கிளியே
பாமரன் ஏதறிவான்

பழங்குப்பை சுமப்பவரெல்லாம் பாமரமக்களை ஏமாற்றுபவர்கள். உண்மையை உறுதிபடச் சொல்ல முடியாதவர்கள்.

குள்ளச்சாமியாரின் ஆன்மீகக் கருத்தியல் அரசியலிலே மகாகவி பாரதியாருக்கு புதிய பரிணாம வளர்ச்சியை உண்டு பண்ணியது.

மற்றொரு நாள் குள்ளச் சாமியாரை அவர் குடிலிலே கண்டார் மகாகவி பாரதியார்.

குள்ளச்சாமியார் மற்றுமொரு உண்மையை வெளிப்படுத்தினார். தொடரும்

வண.ஆ.வே. இயேசுதாசன்– உடுவில்

**அட்டைப்பட விளக்கம்**

# இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம்

அட்டைப்படத்தில் நீங்கள் பார்ப்பது பாரத நாட்டின் பன்னிரண்டாவது ஜனாதிபதியான அப்துல்கலாமையே. இவர் ஓர் எளிமையான மனிதன். சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். இஸ்லாமியர். அத்துடன் தமிழில் புலமை மிக்கவர். இவரது உறவினர்கள் இன்றும் இலங்கையின் தலை மன்னாரில் வாழ்ந்து வருகின்றனர்.இந்தியாவின் 12வது ஜனாதிபதியாக 27.7.2002 அன்று பதவி ஏற்ற அப்துல்கலாம், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். அணுசக்தி விஞ்ஞானி. இவர் தனது பதவியேற்பு வைபவத்தின்போது தன்னுடைய முன்னேற்றத்திற்கு காரணமாக தாம் எதைக் கைக்கொண்டேன் என்று வருமாறு கூறுகின்றார். “What you want to do tomorrow, do it today. What you want to do today, do it now” என்று கூறுகின்றார். ஜனாதிபதி தேர்தலில் இவர் 90 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியடைந்தார். இடதுசாரி கட்சிகள் சார்பாக எதிர்த்துப் போட்டியிட்ட லட்சுமிக்கு 10 சதவீத வாக்குகளே கிடைத்தன.

அப்துல்கலாம் 1931ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ந் தேதி இராமேஸ்வரத்தில் பிறந்தார். அப்துல்கலாமின் தந்தை ஏ.பி.ஜெய்னுலாப்தீன் மரைக்காயர். பாய்மர கப்பல் வைத்திருந்தார். இவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாய்மரக்கப்பல் போக்குவரத்து நடத்தியவர். அவரின் மனைவி அஸ்மா அம்மாள். ஐந்தாம் வகுப்பு வரை இராமேஸ்வரம் சாமியார் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற கலாம், பிறகு ராமநாதபுரம் சுவார்ட்ஸ் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்தார். திருச்சி புனித ஜோசேப் கல்லூரியில் சேர்ந்து, “பி.எஸ்.சி” பட்டப் படிப்பை முடித்தார். அதன் பின்பு சென்னையில் உள்ள தொழில்நுட்ப கல்லூரியில் வான் பொறியியல் படித்தார். 1963ல் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்தார். பின்னர் 1982ம் ஆண்டு ஐதராபாத்தில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

அப்போது முழுக்க முழுக்க இந்திய அறிவியல் தொழில் நுட்பத்துடன் கூடிய ராக்கெட் தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கினார். உயர் தொழில் நுட்பங்களைப் புகுத்தினார். அப்துல்கலாம் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். டாக்டர்.பைரன்ராய் விண்வெளி விருது, தேசிய வடிவமைப்பு விருது, மத்திய பிரதேச அரசு விருது, ஓம்பிரகாஷ் பாஷின் விருது, 1996ல் நாயுடு அம்மாள் நினைவு தங்கப் பதக்க விருது, அறிவியல் தொடர்பான தேசிய அளவிலான ‘மோடி’ விருது, விஞ்ஞான தொழில்நுட்பத்திறனுக்கான தேசிய விருது ஆகியவற்றை இவர் பெற்றுள்ளார். அவரின் சேவையைப் பாராட்டி மத்திய அரசு 1981ம் ஆண்டு ‘பத்ம பூஷண்’ விருதும், 1990ல் ‘பத்ம விபூஷண்’ விருதும் வழங்கியது. அதனைத் தொடர்ந்து 1997ம் ஆண்டில் இந்தியாவின் மிக உயரிய விருதான ‘ பாரத ரத்னா’ விருது இவருக்கு வழங்கப்பட்டது.

பொக்ரான் அணுகுண்டு சோதனையில் அப்துல்கலாம் முக்கிய பங்கு வகித்தார். இந்தியாவில் மதுரை காமராஜ பல்கலைகழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள் அப்துல்கலாமுக்கு ‘டாக்டர் பட்டம்’ வழங்கிச் சிறப்பித்துள்ளன. அப்துல்கலாமின் கல்லூரி படிப்பு முடிந்த உடனேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்க குடும்பத்தினர் முயன்றனர். ஆனால் திருமணம் செய்து கொள்ள அவர் மறுத்துவிட்டார். “திருமணம் எனது அறிவியல் லட்சியத்திற்கு இடையூறாக இருக்கும்’ என்று பதில் கூறி விட்டார். இவர் தமிழ் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்., இவர் தமிழில் எழுதுவார், தமிழில் பேசுவார். அவர் தமது வாழ்க்கை வரலாற்றை “அக்கினிச் சிறகுகள்” என்ற தலைப்பில் புத்தகமாக எழுதியுள்ளார்.

சாதனைகள் செய்து பல விருதுகளைப் பெற்றுக் கொண்ட அப்துல்கலாம் சாதனையாளர்களுக்கு விருதுகளையும் வழங்கி வருகின்றார். 2001ம் ஆண்டு 8ம் வகுப்பு மாணவி சுடர்க்கொடி விகடன் நூலுக்கூடாக ஒரு கேள்வியைக் கலாமிடம் கேட்டார். சுடர்க்கொடி கேட்ட அந்தக் கேள்வியே அவளுக்கு மிகப் பெரும் கௌரவத்தைத் தேடித் தந்தது. அவள் கேட்ட கேள்வி இது தான். “விஞ்ஞானி, தமிழன், மனிதன், இந்தியன் உங்களை நீங்களே வரிசைப் படுத்துங்கள்?” இதற்கு கலாமின் பதில் மனிதனுள் மற்ற மூன்றையும் காணலாம் என்பதே. வாழ்க்கையில் உயர விரும்புபவர்களுக்கு அப்துல் கலாமின் வாழ்வு ஒருவழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தொகுப்பு :- A.S. தேவகுணானந்தன்

# விளையாட சில விளையாட்டுக்கள்

**1. இரகசிய பேனா விளையாட்டு :-**

இவ்விளையாட்டில் 5- 10 பேர் வரை விளையாடலாம். ஒருவர் சற்றுத்தள்ளி, ஓர் மறைவான இடத்திற்குப் போக வேண்டும். மற்றவர்கள் தங்களுக்குள் ஒரு இரகசிய வார்த்தையை தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் தூரமாகச் சென்று அவரைக் கூப்பிடலாம். அப்புறமாக சென்று திரும்பியவர் மற்றவர்கள் தெரிந்தெடுத்த இரகசிய வார்த்தைக்குப் பதிலாக "பேனா" என்ற வார்த்தையை மாற்றி 10 கேள்விகளைக் கேட்க வேண்டும். உதாரணமாக மற்றவர்கள் தெரிந்தெடுத்த வார்த்தை "கண்ணாடி" என்று வைத்துக் கொண்டால் கேள்வி கேட்பவர் "உங்களிடம் அந்தப் பேனா (கண்ணாடி) இருக்கிறதா?", "அந்தப் பேனா எவ்வகை மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்டது?", "அதற்கு உயிர் உண்டா?" போன்ற கேள்விகளைக் கேட்டு அந்த இரகசிய வார்த்தையை கண்டு பிடிக்க வேண்டும். சரியாகக் கண்டு பிடிப்பவர்களுக்கு 5 புள்ளிகளை வழங்கலாம். இதை குழு விளையாட்டாகவும் செய்யலாம்.

**3. படிக்கட்டு விளையாட்டு :-**

இவ்விளையாட்டை விளையாடுவதற்கு குறைந்த பட்சம் இரண்டு பேராவது தேவை. ஒரு எழுத்தைத் தெரிந்து எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அந்த எழுத்தில் தொடங்கி ஒரு எழுத்து வார்த்தை, இரண்டு எழுத்து வார்த்தை, மூன்று எழுத்து வார்த்தை என வரிசையாக எழுதிக் கொண்டே போகலாம். போட்டியாளர் எத்தனை பேராக இருந்தாலும் ஒரே எழுத்தில் போட்டியிடவேண்டும்.

உதாரணம் : "கா என்னும் எழுத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வாறு கூடுதல் சொற்களை எழுதுபவர்களுக்கு 5,4,3,2,1 எனப் புள்ளிகளை வழங்கலாம்.



| ஒருவர் | மற்றவர் |
|---|---|
| கா | கா |
| காது | காடு |
| காகம் | காவேரி |
| காகிதம் | காய்கறி |
| காய்ச்சல் | காய்ச்சல் |
| காஞ்சிபுரம் | ................ |



தொகுப்பு : ஊர்க்குருவி

# பாராட்டுகிறோம்

## செல்வி அஜந்தா தேவராசா



தேசிய வை.எம்.சி.ஏ யினால் நடாத்தப்பட்ட 2007ம் ஆண்டுக்கான கட்டுரைப்போட்டியில் நவாலி வை.எம்.சி.ஏ. ஐச் சேர்ந்த மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி செல்வி அஜந்தாதேவராசா அவர்கள் 3ம் இடத்தினைப் பெற்று ரூபா 3000.00 பணப்பரிசினைப் பெற்றுக்கொண்டதையிட்டு அவரை மகுடம் இதழ்க்குழு சார்பாகவும் வை.எம்.சி.ஏ குடும்பத்தின் சார்பாகவும் மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துகின்றோம்.

# நூலகம் ஒரு பார்வை

விசேட கட்டுரை

**அறிமுகம் :**

ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். சிறுவயது முதல் கல்வியில் நாட்டம் கொண்டு படித்து முன்னேறிய ஒரு சமுதாயம் பண்பட்ட சமுதாயமாகத் திகழும் என்பது உறுதி. இத்தகைய சமுதாயத்தை வளர்த்தெடுப்பதில் முதன்மை சாதனமாக கல்வி அமைகின்றது. மக்களை மக்களாக வாழ வழி காட்டுவதும் கல்வியே. மானிட வாழ்விலே தேடற்கரிய அருஞ்செல்வமாகக் காணப்படுவதும் கல்வியே ஆகும்.

கல்வி என்பது தோண்டுதல், கல்லுதல் எனும் பொருளைத் தரும். அதாவது கற்போரின் உள்ளுணர்வினைத் தூண்டி உள்ளார்ந்த அனுபவங்களை வெளிக்கொணர்வது கல்வி. இவ்வாறு உள்ளத்து உணர்வுகள் தூண்டப்படுவதால் உருவானவையே நூல்கள் ஆகும். இத்தகைய நூல்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுபவை நூலகங்கள் ஆகும். நூலகம் என்பது "நூல்களைச் சேகரித்து வைக்கும் இடம் என்பதுடன் வாசிப்பதற்கும், உசாத்துணைக் கருத்துக்களைப் படிப்பதற்கும், அண்மைக் காலத்தகவல்களை உடனே பெறுவதற்குமான அறிவு சாதனங்களை ஒழுங்குமுறையாகக் கொண்டிருக்கும் நிலையம்" என்பது அறிஞர்கள் கருத்தாகும். மனித சிந்தனைப்படி அறிவுக் கருவூலங்களைத் தாங்கி நிற்பவையே நூல்கள் எனும் கருத்துக்கிணங்க நூலகங்கள் அறிவுக் கையளிப்பு நிலையங்கள் என கல்வி அறிஞர்கள் கூறுகின்றனர். மனித அறிவுக் கருவூலங்களைப் பரிமாற்றப் பயன்படும் ஊடகம் மொழி. மொழி தோன்ற முன் ஆதிமனிதன் தனது கருத்துக்களைப் பரிமாற சைகையினைப் பயன் படுத்தினான். மொழி தோன்றியவுடன் வாய்மொழியாகப் பரப்பப்பட்ட கருத்துக்கள் எழுத்துக்கலை அறிமுகத்துடன் நூல்கள் வாயிலாகப் பரப்பப்பட்டன. எனினும் கி.பி15ம் நூற்றாண்டிலே அச்சுப்பதிப்புச் செய்யும் முறையும், கடதாசிப் பயன்பாடும் ஏற்பட்ட பின் படிப்படியாக முற்காலத்திலும் பார்க்க பெருந்தொகையான நூல்கள் வெளிவரலாயின.

இவ்வாறு அறிவியலானது பல வடிவங்களிலே வெளிவர அவற்றைத் தனிப்பட்ட வகையிலும், நிறுவன ரீதியாகவும் சேகரித்துப் பயன்படுத்தும் வழக்கமும் ஏற்படலாயிற்று. தனிப்பட்ட வகையில் இவற்றைச் சேர்த்தவர்கள் தாமே அவற்றை நூலகமாக ஒழுங்குபடுத்திப் பயன்படுத்தியதுடன், தேவைக்கேற்ப ஏனையவர்களுக்கும் வழங்கி உதவினர். நிறுவன ரீதியாக சேகரிக்கப்பட்டவற்றை ஒழுங்குபடுத்திப் பயன்படுத்த நூலகர் அவசியமாயினார். மேற்காசியாவிலே அதாவது ஈராக்கில் முற்காலத்தில் ஆட்சிபுரிந்த ஆசிய மன்னனால் ஏற்படுத்தப்பட்ட "ஆசுர் பனி பல்" நூல் குறிப்பிடத்தக்கதாகும். நூலகர் பதவியை முதன் முதலில் வகித்தவர் "அனிஸ் அனு" எனும் பபிலோனியர் ஆவார். இவ்வாறு ஆரம்பத்திலிருந்து பல்வேறுபட்ட சாதனங்களில் வெளிவந்தவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் ஆரம்ப கால நூலகம் உதயமாயிற்று.

**நூலகங்களின் வரலாறு :**

நூலகங்களின் வரலாறு மிகவும் அனாதியானது. இதைப் பற்றி அறிய மிகவும் ஆரம்ப காலத்திற்குச் செல்ல வேண்டும். நூலக வரலாறு தனியே நூலக வரலாற்றை மட்டும் குறிப்பது இல்லை. இது மனிதனுடைய நாகரீக தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் குறிக்கும் வரலாறாகவேயுள்ளது. எனவே நூலக வரலாற்றை அறிய மிக ஆரம்ப காலத்திற்குச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது. நூலகங்கள் எழுத்து நிலைப்பட்ட ஆவணங்களைச் சேகரித்து வைத்திருப்பதனால் இவற்றினை அறிய எழுத்தின் வரலாற்றையும், எழுது பொருட்களின் வரலாற்றையும் அறிய வேண்டியுள்ளமை முக்கியமானதாகும்.

**எழுத்து :**

மிக ஆரம்ப காலத்தில் வரிவடிவ எழுத்துக்கள் இருக்கவில்லை. மனிதன் சைகை மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தினான். பின்னர் இத்தன்மை மாறியதும், உருவங்களை வரைந்து உருவ வடிவில் கருத்துக்களை வெளிப்படுத்தினான். இதன் பின் எழுத்துக்கள் வரிவடிவம் பெற்றன. எழுத்தின் ஆரம்பநிலை எகிப்தியரால் வழங்கப்பட்டது. மனித வரலாற்றிலே பல எழுத்து வடிவங்கள் காணப்படுகின்றன.

**எழுதுபொருட்கள் :**

ஆரம்பத்தில் நூல்கள் களிமண் தகடுகள், தோல், மரப்பட்டை, ஓலைச் சுவடுகள், உலோகத் தகடுகள், கற்கள், மெழுகேடுகள், தண்டு, குச்சி எனப் பலவகையான பொருட்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டன.

வளரும்

திருமதி. லோஜினி பார்த்தீபன் , ஆசிரிய நூலகர்,யா/ நவாலி. மகா வித்தியாலயம்

## இடங்களும் காரண இடுகுறிப் பெயர்களும்

நவாலி :- நவாலிக் கிராமத்திலே ஒன்பது பெரிய ஆலயங்கள் காணப்படுகின்றன. இதைக் குறிப்பதற்கு "நவ ஆலயம்" என அழைக்கப்பட்டது மருவி நவாலி என இன்று அழைக்கப்படுகின்றது.

குப்பிளான் :- குப்பிளான் கிராமம் தோட்டப்பயிர்ச் செய்கைக்கு பெயர் போன இடம். இலங்கை அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வேளையில் ஒரு நாள் வெள்ளைக்காரர் இக்கிராமத்திற்குச் சென்றனர். தோட்டத்தில் ஒருவர் கயிற்றைப் பிடித்து பட்டையால் தண்ணீர் அள்ள, இன்னுமொருவர் துலாமிதித்துக் கொண்டிருந்தார். அள்ளப்பட்ட தண்ணீர் வாய்க்காலில் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. இதைப் பார்த்தவர் ஆச்சரியப்பட்டு "Good Plan", "Good Plan" எனக் கூறினார். இது மருவி இன்று குப்பிளான் என அழைக்கப்படுகிறது.

உசன் :- தற்போது உசன் என்று அழைக்கப்படும் இடத்தினை முன்னொரு காலத்தில் ஹுசைன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். இதனால் ஹுசைன், ஹுசைன் என அழைத்து, அது மருவி இன்று உசன் என அழைக்கப்படுகின்றது.

சாவகச்சேரி :- சாவகச்சேரி என்ற இடத்திலே "ஜாவா" வில் இருந்து வந்தவர்களினுடைய கச்சேரி இருந்தது. காலப்போக்கில் ஜாவா – கச்சேரி, ஜாவா – கச்சேரி என அழைக்கப்பட்டு பின்னர் இப்பெயர் மருவி சாவகச்சேரி என அழைக்கப்படுகின்றது.

ஓட்டமாவடி :- மட்டக்களப்பிலே பிரித்தானியருடைய ஆட்சியில் மகாவலிகங்கைக்கு மேலாக கட்டப்பட்ட முதல் பாலம் ஓட்டமாவடி பாலம். அக்காலம் வெள்ளைக்காரர் சிறுவர்களையும் பெண்களையும் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்ற பயம் நிலவியது. அவ்வேளை முன்னால் சென்ற அப்பு ஆச்சியின் கையைப்பிடித்து பயத்துடன் "ஓட்டமாய் வாடி" என்று அழைத்துக் கொண்டு சென்றார். இதனால் இது ஓட்டமாவடி என்று அழைக்கப்படுகின்றது.

**A. பியூலா** நவாலி

## பெயரின் முதல் எழுத்துக்குள் பொதிந்திருக்கும் குண நலன்கள்

**M** இது புத்திசாலித்தனத்தையும், உழைப்பையும், விடாமுயற்சியையும் குறிக்கும். தீர்மானமான அபிப்பிராயங்களும், பிடிவாதமும் உண்டு. அடிக்கடி வாழ்க்கையில் மாறுதல்கள் உண்டாகும். அல்லது தொடர்ச்சியாக கவலைகள் இருக்கும். பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏற்றுக் கொண்டால் தானே பிறர் உதவியின்றி எல்லாவற்றையும் செய்வார். அந்தஸ்தும் மேலான பதவியும் உண்டாகும். நுட்பமான அறிவும் ரசிகத்தனமும் இருக்கும். தாயாம்பூ நீலநிறம், சப்த அலை நீளம் 40!

**N** வர்ணம் நெருப்புச் சிவப்பு மாறுபட்டுக் கொண்டிருக்கும். அலை வேகமுடைய சப்தமாகையால் இதனால் வேகமான இதய உணர்ச்சிகள் எல்லாம் பிரதிபலிக்கப்படும். அன்பிலிருந்து ஆசைவரை, காமத்திலிருந்து கருணை வரை எல்லா உணர்ச்சிகளும் காணப்படும். உணர்ச்சிவசப்பட்டவராதலால் நண்பர்கள் மனதைக் கவர்வர். தன்னிச்சைப்படி எல்லாவற்றையும் செய்வர். சுகந்தரும் எல்லா விசயங்களும், போகங்களும் இவர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும். சிரமங்கள் நேரும். அவைகளை வென்று வீரர்களாக விளங்குவர் சிறு சொல்லும் இவர்கள் மனதில் அம்புபோல் தைக்கும். இவர்கள் ஒரு உணர்ச்சிக் கூட்டமே. சக்திகளை விரயமாக்குவர் (பெயரில் முதல் எழுத்தாக வரும் போது அதிக பலமுள்ளதாகும்)ரத்த ஓட்டத்தில் சிரமங்கள், வாயுப்பிடிப்பு, நரம்புச் சோர்வு ஏற்படும்.

**J. காண்டீபன்**

தொடரும்.........

## விவிலியத் திருப்பாடல்களில் பரந்து காணப்படும் ஒழுக்க விழுமியங்கள்

இறைவனில்லையேல் நாம் வாழும் இந்த நிலமென்ன எந்த நிலமுமில்லை. காரணம் அனைத்தையும் படைத்தவர் என்பது தான். அவர் தான் மூலம் அவர்தான் முழுமை. மூலமும் முழுமையுமான அந்த இறைவனை ஆண்டவனை நம் இதயத்திலே பதித்து வாழ்வதே உகந்தது - சிறந்தது. அந்த நிலை பூரணமாக வளர்ந்தால், மனிதன்... இறையருள் பெறலாம்; இறைவனின் பேரன்பில் வாழலாம்; நல்வாழ்வு காணலாம்; குறைகள் அகற்றலாம்; புத்துயிர் பெறலாம்; நீதிவழி நடக்கலாம்; தீங்குகளுக்கு அஞ்சாது முகங்கொடுக்கலாம்; எதிரிகளை எதிர்கொள்ளலாம்; மரணத்தின் பின் இறை இல்லத்தில் இனிதாக நெடுநாள் வாழலாம்.

### திருப்பாடல் 23.

1 ஆண்டவர் என் ஆயராய்
வாழ்பவர் ஆதலினால்
ஒன்றுக்கும் எனக்குக்குறை
என்றைக்கும் இல்லையென்பேன்

2. பசுமையாய் உள்ள அந்த
அருமையாம் புல் வெளியில்
எனைப் பாச மாய் நடத்தி
இளைப்பாறச் செய்வார் நல்ல
நீர்நிலை இடங்களுக்கு
பார்த்தெனை அழைத்துச் செல்வார்.

3. தன்பெயர்க் கேற்ற வண்ணம்
புத்துயிர் எனக்களித்து
எப்போதும் நீதிவழி
தப்பாது நான் நடக்க
நிச்சயம் எனக்கு அவர்
சந்ததம் அருள் புரிவார்

4. சா இருள் சூழ்ந்த பள்ளத்
தாக்கினில் நான் நடக்க
நேர்ந்தாலும் ஆண்டவர் நீர்
எந்நாளும் என்னுடனே
இருப்பதால் தீங்கெதற்கும்
உளத்தினால் அஞ்சமாட்டேன்
உம்முடை கோலும் இன்னும்
உம்முடை நெடுங்கழியும்
என் இறை வா நிசமாய்
எந்தனை நன்கு தேற்றும்

5. எந்தனின் எதிரிகளின்
கண் முன்னில் எனக்கு ஒரு
விருந்தினைத் தந்து நறு
மணந்தனை வீசும் அருந்
தைலத்தைப் பூசி எந்தன்
தலையினைச் சுத்தி செய்தீர்
இறைவனே எனது பாத்ரம்
நிறைந்துமே வழிகின்றது.

6. என்னுடைய வாழ்நாளெல்லாம்
உம்முடைய அருள் நலமும்
நிறைவடை பேரன்புமே
எனைப்புடை சூழ்ந்து நிற்கும்
அப்போது ஆண்டவர் உம்
நற்பேறு இல்லத்திலே
இனிவரும் நாட்களெல்லாம்
குடிபுகுந்(து) இனிது வாழ்வேன்.

கவிதை வரிகள்
முது கலைஞர் - கலாபூசணம்
நவாலியூர் நா. செல்லத்துரை

# குறுக்கெழுத்துப் போட்டி - இல 02

**போட்டி விதிமுறைகள்**

சரியான விடைகளை இணைக்கப்பட்டுள்ள கூப்பனிலுள்ள சதுரக் கட்டங்களில் முறைப்படி நிரப்பி 31.04.2008ற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். சரியான விடையை அனுப்பி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. யூலியஸ் சீசரின் மனைவி
3. மூச்சுத் திணறல் என்றும் சொல்லலாம்.
5. தென்னையின் இளங்காய்
7. அநேகமாகப் பழங்காலப் பெண்கள் கைகளில் அணிந்த அணிகலன்.

### மேலிருந்து கீழ்

1. மாம்பழ வகைகளில் ஒன்று
2. சீராக மூச்செடுத்து உடலைப் பல நிலைகளில் வைத்துச் செய்யும் பயிற்சி
4. இலங்கையில் தேர்தல் வாக்களிப்பின் போது வாக்குச் சீட்டில் போடும் குறியீடு.
6. மரம் (தலைகீழாகவுள்ளது)

---

## குறுக்கெழுத்துப் போட்டி - இல 01

**பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலி**


1. செல்வி. க. சிவஜெனனி ஆனைக்கோட்டை.

**சரியான விடை எழுதி பாராட்டைப் பெறுபவர்கள்**

1. கு. சிவகுமாரன் - காரைநகர்
2. K. நவஜீவன் - அச்செழு
3. S. தர்சனா - சுதுமலை
4. S. டிசந்தியா - ஆனைக்கோட்டை
5. M. ஆசா - ஆனைக்கோட்டை.
6. V. மேரிலிண்டா - நவாலி வடக்கு
7. நவம் யேசுசகாயம் - நவாலி தெற்கு
8. S. லக்சிகா - நவாலி தெற்கு
9. G. மெலோனி - நவாலி தெற்கு
10. T. கணேசாந் - ஆனைக்கோட்டை
11. J. மேசி - மானிப்பாய்
12. E. கஜானா - நவாலி கிழக்கு
13. V. ஆனந்தரூபி - நவாலி வடக்கு
14. V. பிரணவன் - நவாலி கிழக்கு
15. T. தனுஷன் - நவாலி கிழக்கு
16. S. சிவமேகலை - சுன்னாகம்
17. J. மாதுரி - தொல்புரம் கிழக்கு
18. K. கேமாவதி - ஆனைக்கோட்டை
19. T. கேசவன் - காரைநகர்
20. S. பிறேமலதா - காரைநகர்
21. S. பிறேமலக்ஷன் - ஆனைக்கோட்டை
22. A. அன்றுஜா - ஏழாலை தெற்கு
23. V. சஜித்தா- மானிப்பாய்
24. P. ஜுலி - குருநகர்
25. K. பானுசா - நவாலி வடக்கு
26. B. லக்சலா - நவாலி தெற்கு
27. J. கில்ரன் - மானிப்பாய்
28. A. சர்மிலா - நவாலி தெற்கு
29. S. துளசிகா - மானிப்பாய்
30. T. ஜதீஸ்குமார் - காரைநகர்
31. T. சுபாசினி - காரைநகர்
32. செ. சியாமளா - பண்டத்தரிப்பு

**01 ன் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | ழி | | | 3 மி |
| 4 க | டை | | 5 அ | ரி | சி |
| 6 வை | க் | 7 கி | ங் | | ன் |
| | 8 கு | தி | கா | ல் | |
| 9 வி | ட் | ல் | டி | | 10 ஊ |
| 11 செ | டி | | | 12 சூ | ளை |





**மகுடம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமா?**

## கட்டண விபரம்

| | முழுப்பக்கம் | அரைப்பக்கம் |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - 6000/= | 5000/= |
| பின் அட்டை | - 2000/= | 1000/= |
| உள் பக்கம் | - 1000/= | 500/= |

பிறந்தநாள், திருமணவாழ்த்துக்கள் - 200/=


ASTAN **அஸ்ரன் கல்வி நிலையம்**

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. T.P - 021-2224031

**✻ G.A.Q, 1st in Commerce**

**வகுப்புக்கள் வெகு தூரத்தில் இல்லை....**

தரம் 01 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள்

*கற்கத்துடிக்கும் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டி.*



அச்சுப்பதிப்பு : றூபன் பிறிண்டேர்ஸ்.

முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. *T.P 0776 624386*